செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-63 மார்ச், 2026

அனைத்துலக மகளிர் தின புரட்சிகர வாழ்த்துக்கள்

அனைத்துலக மகளிர் தினம் - 08 மார்ச் 2026

பெண்களுக்கான உரிமைகள், நீதி ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவோம்

2026ஆம் ஆண்டு மார்ச் **8**ஆம் தேதி **116**வது சர்வதேச மகளிர் தினம் உலகெங்கும் அனுசரிக்கப்படுகின்றது. நமது சமூகத்தில் பெண்களின் நிலைமைகள் மற்றும் அன்றாடம் அவர்கள் சந்திக்கும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்த அக்கறையுடன் உலகம் முழுவதும் மகளிர் தினம் அனுசரிக்கப்படுகின்றது. பெண்களின் உரிமைகளை உறுதி செய்தல் மற்றும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகப் போராடுவதற்கான நமது செயல்பாடுகளை கூர்மைப்படுத்தும் முக்கியமான நாளாக அனைத்துலக மகளிர் தினம் அமைந்திட வேண்டும்.

2026ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினத்திற்கான கருப்பொருளாக "அனைத்து பெண்களுக்கான உரிமைகள், நீதி ஆகியவற்றை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவோம் **(RIGHTS-JUSTICE-ACTION FOR ALL WOMEN AND GIRLS)**" என்று ஐக்கிய நாடுகள் சபை முன்மொழிந்துள்ளது,



21ஆம் நூற்றாண்டின் இரண்டாம் காலாண்டைத் தொடங்கும் இத்தருணத்தில், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சட்டபூர்வமான உரிமைகளின் இடைவெளி அனைத்து நாடுகளிலும் அதிகரித்துக் கொண்டே உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது. தற்போது, **2026**ஆம் ஆண்டில், உலகளவில் ஆண்கள் அனுபவிக்கும் சட்ட உரிமைகளில் **64** சதவீதம் மட்டுமே பெண்களுக்கு உதவிடும் வகையில் உள்ளது.

வேலை, ஊதியம், பாதுகாப்பு, குடும்பம், சொத்து, வணிகம் மற்றும் ஓய்வூதியம் உள்ளிட்ட வாழ்க்கையின் அடிப்படை தேவைகளில் பெண்களுக்கு முறையான பாதுகாப்பு ஆகியவை இன்றளவும் சட்டங்களாலும் சமூகத்தினாலும் மறுக்கப்படுகின்றது.

தீங்கு விளைவிக்கும் சமூக விதிமுறைகள், பாரபட்சமான சட்டங்கள் ஆகிய தாக்குதல்களையும், தடைகளையும் பெண்கள் அன்றாடம் எதிர்கொள்கின்றனர். பெண்களின் உரிமைகளை உறுதி செய்யும் நீதி அமைப்புகள் செயல்படாத சமூக அமைப்பில் பெண்களுக்கான உரிமைகள் என்றென்றும் வாக்குறுதிகளாக மட்டுமே இருக்கின்றது.

உலகில் தொழில்மயம் உருவான காலம் முதற்கொண்டே உழைக்கும் பெண்களுக்கான இயக்கமும் தொடங்கப்பட்டது. தொழிற்சாலைகளில், 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புலம்பெயர்ந்த பெண்கள் அதிக எண்ணிக்கையில் பணியமர்த்தப்பட்டனர். ஆனால் அவர்கள் அபாயகரமான பணிச்சூழலில் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பெண் தொழிலாளர்களின் வேலை நேரம் நாளொன்றிற்கு சுமார் பதினாறு மணி நேரமாக இருந்த அக்காலத்தில், ஐந்து வயது முதல் 12-14 வயது வரையிலான இளம் பெண்கள் கூட வேலைக்குச் செல்ல நிர்பந்திக்கப்பட்டனர்.

மிகவும் ஆபத்தான பணியிட சூழலில் பணியாற்றிய அப்பெண்களின் ஊதியம் மிகவும் குறைவாக இருந்தது.



தொழிற்சங்கம் துவங்கும் உரிமை வேண்டி பெண் தொழிலாளர்களின் போராட்டங்கள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இத்தகைய அவலமான பணி நிலைமைகளை எதிர்த்து பெண் தொழிலாளர்களின் போராட்டங்கள் மற்றும் வேலைநிறுத்தங்கள் உலகெங்கிலும் அதிகரித்தது.

தொழிற்சங்கம் துவங்கும் உரிமை மற்றும் நாளொன்றிற்கு பத்து மணி நேர வேலை ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி, 1908ஆம் ஆண்டில், கடும் குளிரையும் பொருட்படுத்தாது நியூயார்க்கின் மன்ஹாட்டன் நகரில் ஆயத்த ஆடை தயாரிக்கும் நிறுவனத்தில் பணிபுரிந்த சுமார் 30,000 பெண்கள் பெரும் போராட்டத்தினை துவக்கினர். போராடிய பெண்கள் மீது இரக்கமற்ற முறையில் தடியடி மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு பலர் கொல்லப்பட்டனர். .

அதனைத் தொடர்ந்து தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் தப்பித்துச் செல்ல வெளியேறும் வசதியில்லாத நிலைமையினால் சுமார் 125 பெண் தொழிலாளர்கள் மாண்டனர். அதே காலகட்டத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வேண்டி இயக்கம் உலகம் முழுவதும் நடந்து கொண்டிருந்தது.

1910 ஆம் ஆண்டில், கோபன்ஹேகனில், சோசலிஸ்ட் பெண்களின் இரண்டாவது மாநாடு நடந்தது. அதில், தொழிற்சங்கத் தலைவர் தோழர் கிளாரா செட்கின், உழைக்கும் பெண்களின் போராட்டங்களை நினைவுகூரும் ஒரு நாளை "சர்வதேச உழைக்கும் பெண்கள் தினமாக" அனுசரிக்க அறைகூவல் விடுத்தார். அதனைத் தொடர்ந்து, மார்ச் 8ம் நாளன்று சர்வதேச மகளிர் தினமாக அனுசரிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. துவக்கத்தில் சில நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் மகளிர் தினத்தை கொண்டாடத் தொடங்கினர்.

ஆனால் இன்று உலகெங்கிலும் அனைத்து நாடுகளிலும் சர்வதேச மகளிர் தினம் ஆண்டுதோறும் மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடப்படுகின்றது. மனிதகுல வளர்ச்சியில் பெண்களின் பிரிக்க முடியாத பங்கினை உலகிற்கு உணர்த்திடவும், பெண்கள் அனுபவிக்கும் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் அநீதிகளுக்கு எதிரான நமது போராட்டத்தைத் தொடர்ந்து தீவிரப்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கும் நாளாகவும் அனைத்துலக மகளிர் தினம் விளங்குகின்றது.



பெண்களை சிறுமைப்படுத்தி அடக்க முயலும் எந்தவொரு சமூகமும் முன்னேற முடியாது. ஆனால் இந்த நவீன காலத்திலும் பெண்கள் எல்லா விதமான சுரண்டல்களுக்கும் ஆட்படுத்தப்படுகின்றனர். முதலாளித்துவ சக்திகளின் உலக மயமாக்கல் கொள்கைகளின் தவிர்க்க முடியாத விளைவுகளால் பெண்கள் வணிகக் கண்ணோட்டத்தில் சிறுமைப் படுத்தப்படுகின்றனர். சமூகத்தில் பெண்களுக்கு உரிய உரிமை மறுக்கப்படுகிறது.

பெண்ணுரிமைகளை பேணிக் காக்க தொழிற்சங்கங்கள் உறுதி மிக்க போராட்ட நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடவேண்டியது அவசியம்

இன்று உலகில் உள்ள தொழிலாளர்களில் சுமார் அதாவது **40** சதவீதத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பெண்கள் ஆவர். பெண் தொழிலாளர்கள் பெருமளவில் மிகக் குறைந்த ஊதியத்துடன் நாகரீகமற்ற வேலை நிலைமைகளில் ஒப்பந்த அடிப்படையில் அன்றாடப் பணிகளில் தள்ளப்படுகின்றனர். தொழிலாளர் உரிமைகள் மறுக்கப்பட்டு, குறைந்த ஊதியம் மற்றும் பாதுகாப்பற்ற மோசமான பணி நிலைமைகளின் கீழ் அவர்கள் தாக்குதலுக்கு ஆளாகின்றனர்.

ஒரே விதமான பணிகளுக்கு ஆண்களை விட குறைந்த சம்பளம் வழங்கப்பட்டு பெண்கள் கடுமையான பாகுபாட்டிற்கு ஆளாகிறார்கள். உலகளவில், ஆண்களை விட பெண்கள் இருபது முதல் முப்பது சதவீதம் குறைவான ஊதியம் பெறுகின்றனர்.

அதிக எண்ணிக்கையிலான பணிபுரியும் பெண்களுக்கு மகப்பேறு பாதுகாப்பு உத்தரவாதம் அரிதாகவே அளிக்கப்படுகிறது, மேலும் கர்ப்பமாக இருக்கும் பணிபுரியும் பெண்கள், தங்கள் வேலையை இழக்கும் அச்சுறுத்தல், இடைநிறுத்தப்படும் வருமானம் மற்றும் அதிகப்படியான வேலை பளுவின் காரணமாக ஏராளமான உடல்நல அபாயங்களை எதிர்கொள்கின்றனர். பணிபுரியும் இடங்களில் சுரண்டல் மற்றும் முறைகேடாக நடத்தப்படும் பாதிப்புகளுக்கு உள்ளாகி உழைக்கும் பெண் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.



பெண்களின் உரிமைகள் மனித உரிமையாக நிலைநாட்டப்பட வேண்டும். பெண்களின் உரிமைகள் நிலைநிறுத்தப்படுவதை உறுதி செய்வது ஒவ்வொருவரின், ஒவ்வொரு சமூகத்தின் மற்றும் ஒவ்வொரு தேசத்தின் அடிப்படைக் கடமையாகும்.

பொதுவாகப் பெண்கள் பல வழிகளில் பாதிக்கப்படும் போதும், நியாயமான ஊதியம் வழங்காமை, பணியிடத்தில் துன்புறுத்தல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இல்லாமை, மகப்பேறு விடுப்புப் பலன்கள் மறுப்பு போன்ற எண்ணற்ற பிரச்சனைகளை பணிபுரியும் பெண்கள், எதிர்கொள்கின்றனர்.



உழைக்கும் பெண்கள் அனைவரும் முழுமையாக தொழிற்சங்க இயக்கங்களில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும், அதே சமயம், உழைக்கும் பெண்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் தொழிற்சங்கங்கள் உறுதி மிக்க போராட்ட நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுதல் அவசியமாகும்.

நமது நாட்டில் வங்கித் துறையில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பதாதையின்கீழ் பெண் ஊழியர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் பங்கேற்று வருவதை பெருமையாக கருதுகிறோம். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் துவங்கப்பட்ட நாள்தொட்டே பெண்களுக்கு சமமான ஊதியம் மற்றும் மேம்பட்ட பணி நிலைமைகள் தொடர்ந்த போராட்டங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம்.

அரசுத் துறை மற்றும் பொதுத்துறையில் உள்ள பெண்கள் ஒப்பீட்டளவில் ஓரளவு பாதுகாப்பைப் பெற்றுள்ளனர். ஆனால் தனியார் துறையில், குறிப்பாக அமைப்புசாரா பிரிவுகள் மற்றும் பணி நிறுவனங்களில் பெண் தொழிலாளர்களின் நிலை இன்றளவும் பாதுகாப்பற்று கையறு நிலையிலேயே உள்ளது. பெண்கள் சமமற்ற முறையில் நடத்தப்படுவதோடு, ஆண்களை விட குறைந்த ஊதியம், பல்வேறு வகையான சுரண்டல் மற்றும் அவர்களின் சுயமரியாதை மற்றும் கண்ணியத்தை பாதிக்கும் நிலையில் பணிபுரிந்து வருகின்றனர்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மேற்கொள்ளும் தொடர்ச்சியான முயற்சிகள் காரணமாக, வங்கிகளில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் கடமையாற்றுகின்றனர்.

மேலும், பணியிடங்களில் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பாலின வன்முறைகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளைக் கோரியும், பாலின துன்புறுத்தல் கண்காணிக்கும் குழுவில் பெண் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்க வலியுறுத்தியும், அனைத்துலக மகளிர் தினமான மார்ச் 8ம் நாளினை விடுமுறையாக அறிவிக்க வேண்டியும், தொழிற்சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் பெண் தோழர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்குவதை உறுதிப்படுத்தவும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 9வது தேசிய மகளிர் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வங்கிகளில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் அனைத்து மட்டங்களிலும் நமது அமைப்பில் அதிக அதிகாரம் பெறுவதற்கு நாம் நமது முயற்சிகளைத் தொடர வேண்டும். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மற்றும் நமது இணைப்பு தொழிற்சங்கங்களின் தலைமைப் பொறுப்புகள், மத்தியக் குழு மற்றும் பொதுக்குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகிய அமைப்புகளில் பெண் தோழர்கள் சிறப்பாக பணியாற்றி தங்கள் பங்களிப்பை ஆற்றி வருகின்றனர்.

எதிர்வரும் காலத்தில் சங்கப் பொறுப்புகளில் பெண் தோழர்களின் பங்களிப்பு மேலும் அதிகரிக்க வேண்டும். இத்தகைய நோக்கத்தில் நாம் உறுதியுடனும் பெரும் எதிர்பார்ப்புகளுடனும் சர்வதேச மகளிர் தினத்தை அனுசரித்திட அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் இணைப்பு சங்கங்கள் சர்வதேச மகளிர் தினத்தை பல்வேறு மையங்களில் கூட்டங்களை நடத்துவது, சமூக உதவித் திட்டம் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

ஈரோடு மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற மகளிர் சிறப்புக் கூட்டம் - 08-02-2026

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் எண்பதாவது ஆண்டினைக் குறிக்கும் வகையில், ஈரோடு மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில் கடந்த **08-02-2026** அன்று நமது சங்கத்தின் பெண் தோழர்கள் கலந்து கொண்ட சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

ஏராளமான மகளிர் வங்கி ஊழியர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் வங்கித் துறையில் பெண் ஊழியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பெண் ஊழியர்கள் பெற வேண்டிய சலுகைகள் மற்றும் தற்போது ஒன்றிய அரசு அமல்படுத்தியுள்ள நான்கு தொழிலாளர் குறியீடுகள் எவ்வாறு பெண் தொழிலாளர்களை பாதிப்பிற்கு உள்ளாக்கப் போகின்றது என்பன குறித்த விவாதங்கள் நடைபெற்றது.



ஈரோடு மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் **A** அல்டாப் ஹுசைன் தலைமையில் நடைபெற்ற இச் சிறப்புக் கூட்டத்தில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் இணைச் செயலாளர் தோழர் **J** விஜயலக்ஷ்மி மற்றும் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசின் செயலாளர் தோழர் வஹிதா நிஜாம் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

தோழர் **J** விஜயலக்ஷ்மி அவர்கள் தன்னுடைய துவக்க உரையில், வங்கித் துறையில் பெண் உறுப்பினர்களுக்கு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அரணாக விளங்குவதன் காரணத்தினால், பிற துறைகளில் பெண் ஊழியர்கள் சந்திக்கும் பல்வேறு சிக்கல்கள் வங்கித் துறையில் நீக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

பெண் தோழர்கள், தங்களுடைய பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளவும், அவற்றிற்கு சித்தாந்த அடிப்படையிலான தீர்வுகளைக் கண்டறியவும் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் சிறப்புரையாற்றிய தோழர் வஹிதா நிஜாம் அவர்கள், சமூகத்தில் நிலவும் சுரண்டலைத் தடுப்பதற்கும் சமத்துவத்தை பேணிக் காப்பதற்கும் பெண்கள் மேலும் ஒன்றிணைந்து தொழிற்சங்க



நடவடிக்கைகளில் பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். உழைக்கும் மகளிர் அன்றாடம் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளைக் குறித்து தோழர் வஹிதா நிஜாம் அவர்கள் விளக்கியதுடன், அவற்றை எதிர்த்துப் போராடி, முறியடித்து உரிமைகளைப் பெறுவதற்கு பெண் ஊழியர்கள் தவறாது பெருமளவில் தங்களை அன்றாட தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டியது அவசியம் என்று கூறினார்.



பெண்களுக்கு அவர்களின் பிரச்சினைகளை திறம்பட நிவர்த்தி செய்ய அதிகாரம் தேவை என்பதை அனைவரும் உணர்ந்து அதனை உறுதிசெய்ய வேண்டும் என்றும், அதனை அடைவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், சமூகத்தில் பாலின சமத்துவத்தை நோக்கிய நடவடிக்கைகளத் துரிதப்படுத்த வேண்டும் என்றும், அதற்கான முன்னெடுப்புகளில் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.



வங்கித் துறையில் பெண் தோழர்களுக்கு ஆதரவாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் முக்கியப் பங்காற்றுவதை குறிப்பிட்டு, அதன் பெண் உறுப்பினர்களை தோழர் வஹிதா நிஜாம் அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.

ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து நடைபெற்ற பிப்ரவரி 12, 2026

நாடு தழுவிய வங்கி வேலை நிறுத்தம் மாபெரும் வெற்றி

வங்கிகள் மற்றும் காப்பீட்டுத் துறையில் பிப்ரவரி 12, 2026 அன்று நடைபெற்ற நாடு தழுவிய வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது.

இந்திய நாடு மிகப்பெரிய வேலையின்மையை எதிர்கொள்ளும்போது, புதிய தொழிலாளர் சட்டத்தில், இளைஞர்களுக்கு அதிக வேலைகளை உருவாக்குவதற்குப் பதிலாக, நிலையான கால வேலைவாய்ப்புத் திட்டம் ஒன்றிய அரசால் முன்மொழியப்படுகிறது. இது இளைஞர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறி ஆக்கும்.

மேலும், தற்போதுள்ள 29 தொழிலாளர் சட்டங்களை மாற்றியமைக்கும் நான்கு புதிய தொழிலாளர் சட்டங்கள் குறித்த மத்திய அரசின் சமீபத்திய அறிவிப்பை எதிர்த்தும், உழைக்கும் வர்க்கத்தின் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவதை எதிர்த்தும். புதிய தொழிலாளர் சட்டங்கள் மற்றும் தொழிலாளர் கொள்கையின் கீழ் பல்வேறு போராட்டங்களால் பெறப்பட்ட தொழிலாளர் உரிமைகள் பறிக்கப்படும் முயற்சிகளைக் கண்டித்தும் பத்து மத்திய தொழிற்சங்கங்கள் 2026, பிப்ரவரி 12 அன்று நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தன.



இச்சட்டங்கள் அனுமதிக்கப்பட்டால், தொழிற்சங்கத்தைத் தொடங்குவது, தொழிற்சங்கத்தை நடத்துவது, தொழிற்சங்கத்திற்கு நிலையான தலைமையை வழங்குவது, தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்க வேலைநிறுத்தங்களை மேற்கொள்வது போன்றவை தடை செய்யப்படும் நிலை ஏற்படும்.



வேலை-வாழ்க்கை சமநிலைக்காக தொழிலாளர்கள் போராடும் போது, முதலாளிகள் வேலை நேரத்தை ஒரு நாளைக்கு 10 அல்லது 12 மணிநேரமாக அதிகரிக்க அதிகாரம் அளிக்க இச்சட்டத் திருத்தங்கள் வழிகோலுகின்றன.

தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தங்கள் இச்சட்டங்கள் மூலம் தடை செய்யப்படும் போது, நிர்வாகங்களுக்கு கதவடைப்பு செய்யவும், ஆட்குறைப்பு செய்யவும் சுதந்திரம் வழங்கப்படுகிறது. தொழிலாளர்களில் பெரும்பாலோர் எந்தவொரு தொழிலாளர் சட்டங்களின் வரம்பிலிருந்தும் விலக்கப்படுவதால், தொழிலாளர்கள் மேலும் சுரண்டப்படுவார்கள்.

காப்பீட்டுத் துறையில் 100% அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. வங்கித் துறையிலும், IDBI வங்கியை விற்க முயற்சிப்பது, நமது தனியார் வங்கிகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விற்பது, பொதுத்துறை வங்கிகளை தனியார்மயமாக்கும் முயற்சிகள் போன்ற மோசமான தாக்குதல்களை நாம் காண்கிறோம்.



ஒன்றுபட்ட பொது தொழிற்சங்க இயக்கத்தின் போராட்டங்களில் நாம் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். அதனால்தான் வங்கிகள் மற்றும் காப்பீட்டுத் துறையில் பிப்ரவரி 12, 2026 அன்று வேலைநிறுத்தத்தைக் கடைப்பிடிக்க அழைப்பு விடுக்கப்பட்டது. வேலைநிறுத்த நாளன்று தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்தப் பொது வேலைநிறுத்தத்தில் பங்கேற்றதன் மூலம், நமது நாட்டில் தொழிலாளர் உரிமைகள் மீதான பல தாக்குதல்களுக்கு எதிராக இடைவிடாத மற்றும் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களுடன் நம் சகோதரத்துவத்தையும் ஒற்றுமையையும் மீண்டும் ஒன்றுபட்டு உறுதிப்படுத்தியுள்ளோம்.





வங்கித் துறையில், AIBOC, NCBE, INBEF மற்றும் INBOC ஆகியவை நம் வேலைநிறுத்த நடவடிக்கைக்கு தங்கள் தார்மீக ஆதரவை வழங்கின. மாநிலத்தின் பல்வேறு மாவட்ட தலைநகரங்களில் கடந்த 11-02-2026 மற்றும் 12-02-2026 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிகளில் ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

நாடு தழுவிய வங்கி ஊழியர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்று பெரும் வெற்றி பெறச் செய்த நம் உறுப்பினர்களை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் பாராட்டுகின்றது.

கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் கோரி நடைபெற்ற
மாநிலம் தழுவிய தர்ணா போராட்டம் மாபெரும் வெற்றி

கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வேண்டி தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் சார்பில் சென்னையில் 06-02-2026 நடைபெற்ற மாநில அளவிலான தர்ணா மாபெரும் வெற்றி பெற்றது.



தர்ணா போராட்டத்தில் வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் பணி புரியும் 1200க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். மாநிலத்தில் செயல்படும் அனைத்து கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கங்களைச் சேர்ந்த ஏராளமான உறுப்பினர்கள் ஆர்வமுடன் இந்த தர்ணா போராட்டத்தில் பங்கேற்றனர்.



APEX வங்கிகள், அனைத்து மாவட்ட கூட்டுறவு வங்கிகள், மாநில மற்றும் PRIMARY ARD வங்கிகள், பல்வேறு URBAN வங்கிகள் மற்றும் PACS ஆகியவற்றில் செயல்படும் நம் இணைப்பு சங்கங்களைச் சார்ந்த ஏராளமான சங்கத் தோழர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் சென்னை வந்து மாநில அளவிலான தர்ணா போராட்டத்தில் பெருமளவில் பங்கு பெற்றது பாராட்டத்தக்கதாக இருந்தது.

தர்ணா போராட்டத்திற்கு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம், தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **G** வைரப்பன் ஆகியோர் தலைமை வகித்தனர்.



தர்ணாவில் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் **K** நடராஜன், தமிழ் மாநில **AITUC** பொதுச் செயலாளர் தோழர் **M** ராதாகிருஷ்ணன், தலைவர் தோழர் காசி விஸ்வநாதன், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொருளாளர் தோழர் ஸ்ரீகிருஷ்ணா, தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் செயலாளர் தோழர் **R** கார்த்திக், **TN PACS** ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் சேகர், தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் செயலாளர் தோழர் **A** சுப்ரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு நம் கோரிக்கைகள் குறித்து எடுத்துரைத்து தர்ணா போராட்டத்தினை வாழ்த்திப் பேசினார்.



கூட்டுறவு வங்கி ஊழியர்கள் பணி ஓய்வுக்குப் பிறகு கண்ணியமாக வாழ்வதற்குத் தேவையான ஓய்வு ஊதியம் வேண்டும் என்றும், கூட்டுறவு வங்கிகள் சிறப்பாகச் செயல்படும் காரணத்தால் ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தை வழங்குவது நியாயமான கோரிக்கை என்றும் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. தர்ணாவில் பங்கேற்றவர்கள் ஓய்வூதிய பலனை கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு அமல் படுத்திட வேண்டி முழக்கங்களை எழுப்பினர்.



கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்திட வலியுறுத்துவதற்காக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரை சந்தித்து கோரிக்கை மனு அளிக்க முடிவு செய்யப்பட்டது. மேலும் இக்கோரிக்கை தொடர்பாக நமது நிர்வாகிகள் தமிழக முதலமைச்சரை சந்திக்கவும் முடிவு செய்யப்பட்டது. தர்ணா போராட்டத்தில் பெருவாரியாகப் பங்கேற்று நம் போராட்டத்தினை வெற்றி பெறச் செய்த நம் உறுப்பினர்களை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனமும், தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கமும் பாராட்டி வாழ்த்துகின்றது.

ஓய்வூதியம் உள்ளிட்ட முக்கியக் கோரிக்கைகளை வலியுறுத்தி கூட்டுறவு சங்கங்களின் மாநிலப் பதிவாளருடன் சங்க நிர்வாகிகள் சந்திப்பு

கடந்த **24-02-2026** அன்று தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு **K** நந்தகுமார் **IAS** அவர்களை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் நமது சங்க நிர்வாகிகள் சந்தித்தனர்.



கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு முறையான ஓய்வூதியத் திட்டம் ஏற்படுத்திட வேண்டியதன் அவசியத்தினை பதிவாளரிடம் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் வலியுறுத்தினார்.

ஒன்றிய, மாநில அரசு ஊழியர்கள், வணிக வங்கி ஊழியர்கள் மற்றும் பொதுத்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் உள்ள நிலையில், கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது.

நமது கோரிக்கைகளை கவனமுடன் கேட்டுக் கொண்ட பதிவாளர் அவர்கள், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தற்போது வழங்கப்பட்டுவரும் குறைந்தபட்ச ஓய்வூதியத் தொகையினை உயர்த்தி வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவில் இதற்கான அரசாணை எதிர்பார்க்கப்படுவதாகக் கூறினார்.

மேலும் இச்சந்திப்பின்போது, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு ஊதியத் திருத்த பேச்சுவார்த்தை நடத்திட குழு அமைக்க வேண்டும் என்றும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உதவி மேலாளர் பதவி உயர்வு முடிவுகள் குறித்து தெளிவான ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80ம் ஆண்டினைக் குறிக்கும் வகையில் 8000 கிலோமீட்டர் இருசக்கர வாகனப் பிரச்சாரம் வெற்றிகரமாக மேற்கொண்ட தோழர் சாதத்திற்கு வாழ்த்துக்கள்

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80ம் ஆண்டினைக் குறிக்கும் வகையில் "தேசத்திற்கான வங்கிகள் - மக்களுக்கான வங்கிகள்" என்ற பிரச்சாரத்துடன் சேலம் கரூர் வைஸ்யா வங்கியில் பணியாற்றும் இளம் ஊழியர் தோழர் சாதத், தான் மேற்கொண்ட 8000 கி மீ அகில இந்திய மோட்டார் சைக்கிள் பிரச்சாரத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தார்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80ம் ஆண்டு நிறைவை அனுசரிக்கும் வகையில், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தோழர் சாதத் அவர்கள் நீண்ட தூர அகில இந்திய மோட்டார் சைக்கிள் பயணம் மேற்கொண்டு, அப்பயணத்தின்போது நம் கோரிக்கைகள் குறித்த பிரச்சாரங்களை நாடெங்கிலும் மேற்கொள்ள முன்வந்தார்.



தோழர் சாதத் அவர்கள் தனது அகில இந்திய மோட்டார் சைக்கிள் பிரச்சாரத்தை கடந்த ஜனவரி 30, 2026 அன்று சேலத்தில் இருந்து தொடங்கினார்.

இந்த பிரச்சாரம் ஜனவரி 31ஆம் தேதி காலை சென்னையில் இருந்து அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் C H வெங்கடாசலம் அவர்களால் கொடியசைத்துத் தொடர்ந்தது. இப்பிரச்சாரப் பயணத்தில் தோழர் சாதத் அவர்கள் ஆந்திரா, தெலுங்கானா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா (நாக்பூர்), உத்தரப் பிரதேசம் வழியாகப் பயணம் செய்து உத்தராஞ்சலில் உள்ள ரிஷிகேஷ் மற்றும் நைனிடால் ஆகியவற்றை அடைந்தார்.

அவர் திரும்பும்போது, டெல்லி, ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா (மும்பை), கோவா, கர்நாடகா, கேரளா வழியாக பயணம் செய்து தமிழ்நாட்டின் நாகர்கோவில், கன்யாகுமரியை அடைந்தார்.தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்கள் வழியாக பயணம் செய்து 2026, பிப்ரவரி 20 அன்று சென்னையை வந்தடைந்தார்.



சென்னையில், தோழர் சாதத் அவர்களுக்கு, தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் சார்பில் A K நாயக் பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வரவேற்பு அளித்து பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. பின்னர் சென்னையில் இருந்து அவர் கரூர் (கரூர் வைஸ்யா வங்கியின் தலைமையகம்) பயணம் செய்து, பின்னர் 2026, பிப்ரவரி 22 அன்று சேலத்தில் உள்ள தனது இருப்பிடத்திற்கு 8112 கி.மீ பயணம் செய்து திரும்பினார்.



சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பாக ஏராளமான தோழர்கள் தோழர் சாதத் அவர்களுக்கு சேலத்தில் அன்பான வரவேற்பு அளித்தனர்.

வழியில், நாக்பூர், ரிஷிகேஷ், நைனிடால், டெல்லி, ஜெய்ப்பூர், அகமதாபாத், பரோடா, மும்பை, கோவா, மங்களூர், திருச்சூர், நாகர்கோவில், மதுரை, திருச்சி, போன்ற இடங்களில் சங்கத்தின் தோழர்கள் வரவேற்று, தோழர் சாதத் அவர்களுக்கு தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

தன்னுடைய நீண்ட பயணத்தில் தோழர் சாதத் ஏராளமான பொதுமக்களைச் சந்தித்து, தனியார்மயமாக்கலுக்கு எதிரான அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பிரச்சாரம், பொது மக்களுக்கு சேவை செய்ய பொதுத்துறையை வலுப்படுத்துவது போன்றவற்றைப் பற்றி பிரச்சாரக் கூட்டங்களில் எடுத்துரைத்தார்.




மேலும் நம் கோரிக்கைகள் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், போன்றவற்றை தான் பயணம் மேற்கொண்ட இடங்களில் ஆங்காங்கே மக்களுக்கு தோழர் சாதத் அவர்கள் விநியோகித்தார்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் சார்பில் தோழர் சாதத் அவர்கள் மேற்கொண்ட அகில இந்திய மோட்டார் சைக்கிள் பிரச்சாரப் பயணம் **2026,** பிப்ரவரி **22** அன்று வெற்றிகரமாக நிறைவு பெற்றது. தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் தோழர் சாதத் அவர்களின் இந்தச் சாதனைப் பிரச்சாரப் பயணத்தினை வாழ்த்திப் பாராட்டுகின்றது.

தமிழக அரசியலின் தியாகச் சுடர் அணைந்தது
முதுபெரும் பொதுவுடைமைவாதி தோழர் இரா நல்லகண்ணு மறைந்தார்

மறைந்த வாழ்நாள் போராளி தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு செவ்வணக்கம்



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும், விடுதலைப் போராட்ட வீரருமான தோழர் இரா நல்லகண்ணு அவர்கள் முதுமை மற்றும் மூச்சுத் திணறல் பாதிப்பிற்கு உள்ளாகி சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தனது **101**வது வயதில் **2026,** பிப்ரவரி **25** அன்று பிற்பகல் காலமானார்.

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு வசதியான விவசாயக் குடும்பத்தில் **1925** டிசம்பர் **26**ஆம் தேதி பிறந்த தோழர் நல்லகண்ணு, பள்ளிப் பருவத்திலேயே தேச விடுதலைப் போராட்டங்களின்பால் ஈர்க்கப்பட்டார்.

விடுதலைப் போராட்டமும் - கம்யூனிசப் பாதையும்
ஒரு நூற்றாண்டு காலப் புரட்சிகரப் பயணம்

தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியம் மீது தளராத பற்றுக் கொண்ட தோழர் நல்லகண்ணு அவர்கள் 'புலவர்' பட்டம் பயின்றவர். விடுதலைப் போராட்டமும் மார்க்சியத் தேடலும், பள்ளிப்பருவ காலத்தில் தீவிரமாக நடைபெற்ற இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தாலும் ஈர்க்கப்பட்ட தோழர் நல்லகண்ணு, சிறுவர்களை அணிதிரட்டி, பாரதியின் பாடல்களைத் தெருத்தெருவாகப் பாடிச் சுதந்திரக் கனலை மூட்டியவர்.

1942-44 கால கட்டத்தில் தேச விடுதலைப் போராட்ட வீரர் அண்ணாச்சி சண்முகம் அவர்களிடம் காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் நூல்களை வாங்கிப் படித்து, தத்துவக் கண்ணோட்டம் பெற்றவர். தனது பள்ளி ஆசிரியர் திரு பலவேசம் அவர்கள் உதவியோடு கம்யூனிஸ்டு கொள்கை வழியை தன்னுடைய வாழ்வியலாக தேர்வு செய்துகொண்டார்.

இந்திய விடுதலைப் போராட்டக் களத்தில் தீவிரமாகச் செயல்பட்ட தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு சிறை வாழ்க்கையும், போராட்டங்களுமே அன்றாட வாழ்க்கை ஆயின. விடுதலைப் போராட்டக் காலத்தில், 'திருநெல்வேலி சதி வழக்கில்' கைது செய்யப்பட்டு கடுமையான சித்ரவதைகளுக்கு ஆளானார். ஒன்பதரை ஆண்டுகள் சிறை வாழ்க்கையையும், மேலும் சில ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கையையும் அனுபவித்தார் தோழர் நல்லகண்ணு.



உழைக்கும் மக்களின் உரிமைக்குரலாக விவசாயிகளைத் திரட்டிப் போராடி விவசாயிகள் நில உரிமை பெறுவதில் தோழர் நல்லகண்ணு வெற்றி கண்டார். 25 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றி, அடித்தட்டு மக்களின் நில உரிமைக்காகவும், சாதிய ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் சமரசமின்றிப் போராடினார் தோழர் நல்லகண்ணு அவர்கள்.



1992 முதல் 2005 வரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராகப் பொறுப்பு வகித்த அவர், தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு உயர்ந்த ஆளுமையாகத் திகழ்ந்தார். பொது வாழ்வில் தூய்மை, நேர்மை மற்றும் தன்னலமறுப்பு ஆகியவற்றால் எளிமையின் இலக்கணமாகத் திகழ்ந்தவர் தோழர் நல்லகண்ணு அவர்கள்.

.

தாமிரபரணி ஆற்று மணல் கொள்ளைக்கு எதிராகச் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டது முதல், 1982ம் ஆண்டு மீனாட்சிபுரத்தில் மதவெறி சக்திகள் கலவரத்தை உருவாக்கியபோதும், 1993-98ம் ஆண்டு காலத்தில் சாதிக் கலவரங்கள் நேர்ந்த போது குன்றக்குடி அடிகளாருடன் இணைந்து அமைதிப் பணிகளை மேற்கொண்டது வரை அவரது சமூகப் பங்களிப்பு மகத்தானது.

தோழர் நல்லகண்ணு அவர்களின் பொதுச் சேவையைப் பாராட்டி தமிழக அரசு 2007-இல் டாக்டர் அம்பேத்கர் விருதும், 2022-இல் 'தகைசால் தமிழர்' விருதும் வழங்கிச் சிறப்பித்தது. தமக்குக் கிடைத்த விருதுத் தொகைகள் அனைத்தையும் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கும், பொதுவுடைமை இயக்கத்திற்கும் வழங்கிய பெருமைக்குரியவர் தோழர் இரா நல்லகண்ணு.

புரட்சிகர அறவாழ்வின் அடையாளம் தோழர் நல்லகண்ணுவுக்கு செவ்வணக்கம்

அடித்தட்டு உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக தமிழ்நாடு முழுவதும் கிராமம் கிராமமாகச் சென்று போராட்டக் களத்தில் இணைத்துக் கொண்டு, தமிழ்நாட்டின் உயர்ந்த அரசியல் தலைவர்களில் ஒருவராகப் பரிணமித்த பெருமைக்குரியவர் தோழர் நல்லகண்ணு ஆவார்.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் மற்றும் அதன் செயல்பாடுகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக தோழர் நல்லகண்ணு அவர்கள் இருந்தார். தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பல்வேறு கூட்டங்கள் மற்றும் மாநாடுகளில் பங்கேற்றவர் தோழர் நல்லகண்ணு ஆவார்.

2015ம் ஆண்டு, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் எழுபதாவது ஆண்டு ஸ்தாபன தினக் கொண்டாட்டங்களில் பங்கேற்று, வங்கிகள் தனியார்மய நடவடிக்கைக்கு எதிரான நாடு தழுவிய கையெழுத்து இயக்கத்தின்போது தோழர் நல்லகண்ணு அவர்கள் முதல் கையொப்பமிட்டு நமது சங்கத்தின் பிரச்சார நடவடிக்கைகளைத் துவக்கி வைத்தார்.



வகுப்புவாத, சாதிவெறி சக்திகளுக்கு எதிராக சமரசமின்றிப் போராடி வந்த அந்த மாபெரும் தியாகச் சுடரின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். தோழர் நல்லகண்ணு அவர்களின் நல்லுடலுக்கு முழு அரசு மரியாதையுடன் அஞ்சலி செலுத்தப்பட்ட பின், அவருடைய விருப்பப்படி தோழர் நல்லகண்ணு அவர்களின் உடல் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு மருத்துவ ஆய்வுக்காகக் கொடையளிக்கப்பட்டது.

தோழர் நல்லகண்ணு அவர்களின் உடலுக்கு சம்மேளனத்தின் சார்பில் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் மலர் வளையம் வைத்து செவ்வஞ்சலி செலுத்தினர். தோழர் நல்லகண்ணு அவர்களின் மறைவு பொதுவுடைமை இயக்கத்திற்கும், உழைப்பாளி மக்களுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

வாழ்நாள் போராளி தோழர் நல்லகண்ணு அவர்களின் மறைவிற்கு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் தனது செவ்வணக்கத்துடன் ஆழ்ந்த அஞ்சலியினை தெரிவித்துக் கொள்கிறது.